REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 11உ சனி (27—8—55) ★ ★ வெளியீடு: ஆவணி 12உ ஞாயிறு (28—8—55) [இதழ் 64

### 'ஏக இந்தியா'வில் ஒரு நிகழ்ச்சி!

கோயமுத்தூர் மாவட்டத்தில், 1952 ஜூலையில், விவசாய வேலை செய்யும் ஆண் தொழிலாளருக்கு தினசரி ரூ. 1—4—0 வீதமும், பெண் தொழிலாளருக்கு தினசரி 12 அணு வீதமும் சம்பளம் கொடுக்கப்பட்டது. அதே காலத்தில் பெப்சு மாநிலத்தில் ஆண் தொழிலாளருக்கு அன்றாடக் கூலி ரூ. 2—8—0 ஆகவும், பெண் தொழிலாளருக்கு ரூ. 1—8—0 ஆகவும் இருந்திருக்கிறது.

சர்க்கார் நடத்திய பரிசீலனையிலிருந்தே இது தெரியவருகிறது.

தச்சர்கள், கருமார்கள் போன்ற வேலையில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு சென்னை மாநிலத்தில் தினக்கூலி விகிதம் ரூ 2 முதல் 3 வரையில் இருந்தது; ஆனல், பெப்சுவில், அது ரூ 4 முதல் 5 வரையில் இருந்ததாகவும் தெரியவருகிறது.

# 'தெற்கு தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறது'!

## 'தென்னுடு வடநாட்டின் சந்தையாகி உள்ளது!'

## 'நமது திட்டங்கள் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகின்றன'!

### 'காங்கிரசாட்சியில் பைத்தியக்காரர் தொகை வளருகிறதா?'

### சட்ட சபையில் ஏ. கோவிந்தசாமி இடித்துரை

சென்னை, ஆக. 26—

"முதல் ஐந்தாண்டுத் திட்டம் வடநாட்டைத் தொழில் மயமாக்கி, அங்கு உற்பத்தியாகும் பொருள்களுக்கு தென்னுட்டை 'மார்க்கெட்' ஆக்கத்தான் உதவியது;

"அதே நிலை, இந்த இரண்டாம் திட்டத்திலும் நீடிக்கிறது; திட்டக் குழுவின்முன் தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்த சென்னை மந்திரிகள், 'கடந்த காலத்தில் தென்னுடு புறக்கணிக்கப்பட்டது' என்று பேசுகிற அளவு நிலைமைகளினல் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றனர்;

"வட நாட்டவரின் இந்தப் போக்கு, தென்னுட்டை தனியாக வடநாட்டிலிருந்து பிரித்து, 'திராவிட நாடு' அமைக்கும் கோரிக்கைக்கு மேலும் ஆக்கம் தருவதாகவே அமைந்திருக்கிறது;

"தென்னுடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு, தேசிய ஏடுகள் வரைந்துள்ள 'கேலிச் சித்திர'ங்களை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்;

"திட்டம் போட்டு சென்னை சர்க்கார் கேட்ட தொகை ஒன்று என்ருல், கிடைக்கப்போவது அதில் பாதியாகவே இருக்கிறது; கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையைத்தான் இது நினைவூட்டுகிறது;

"இந்த நிலைமை நீடிக்காமலிருக்க நாம் நல்லதொரு பரிகாரம் தேட வேண்டாமா? தென்னுட்டை தொழில் வளமுள்ளதாக்க ஆட்சியாளர்கள் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்;

"நெய்வேலி திட்டம் குறித்துக்கூட மத்திய சர்க்கார் போதுமான—தகுந்த கவனம் செலுத்துபவர்களாக—அக்கரை கொண்டவர்களாக இருக்கவில்லை; அங்கு வேலைகள் நடைபெறுவதில் அனுவசியமான தாமதம் ஏற்படுகிறது;

"இரண்டாம் திட்டப்படி, மதுரையில் ஒரு 'பைத்தியக்கார ஆஸ்பத்திரி' ஆரம்பிக்கப் போவதாகக்கூறுகிருர்கள்; காங்கிரசார் ஆட்சியில் பைத்தியக்காரர்கள் தொகைதான் அதிகரித்து வருகிறதா?"

—என்று, தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., அவர்கள், சட்டசபையில் நடைபெறும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட விவாதத்தின்போது குறிப்பிட்டிருக்கிருர்.

தொடர்ந்து பேசுகையில் அவர் தென்னுற்காடு மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கியிருப்பதாகவும், அங்கு ஒரு காகித ஆலை, எண்ணெய்த் தொழிற்சாலை, சர்க்கரை ஆலை ஆகியவை நிறுவுவதுடன், கடலூரில் ஒரு கலைக் கல்லூரி திறக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

#### விவாத நிலைமை

சபையில் இன்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் பலர், தென்னுடு தொடர்ந்து வடநாட்டவரால் புறக்கணிக்கப்பட்டு வருவதையும், தென்னுற்காடு நிலக்கரியும், சேலம் இரும்பும் எத்தகைய தொழில் வளத்தினை தென்னுட்டிற்கு தரக்கூடியது என்பதையும் விவரமாக விளக்கிப் பேசியிருக்கின்றனர்.

பல உறுப்பினர்கள், தங்கள் தங்கள் மாவட்டங்களில் துவக்கப்படக்கூடிய தொழில்கள் பற்றிய விபரங்களைத் தெரிவித்து, தங்கள் பகுதி மக்களின் எண்ணங்களைத் தெளிவுபடுத்தியிருக்கின்றனர்.

சர்க்கார் ஊழியர்களுக்கு அதிகச் சம்பளம் தருவதுபற்றி பேசப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்ட கடற்கரைப் பகுதியில் தேங்காய் உற்பத்தி வளர்ச்சிக்கு உதவும் திட்டம், பட்டுக்கோட்டையில் தேங்காய் ஆராய்ச்சி நிலயம் பற்றியும் பேசப்பட்டிருக்கின்றது.

## பர்மா பொருளாதார அபிவிருத்தி

### இந்தியாவிடம் ரூ. 5 கோடி கடன் கேட்கப்படுகிறது

புதுடில்லி, ஆக. 25—

பர்மிய நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக பர்மா சர்க்கார், இந்திய சர்க்காரிடம் ரூ. 5 கோடி வரை கடன் உதவி கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தியாவிற்கும் — பர்மாவிற்குமிடையே உள்ள நல்லுறவினுல், பர்மாவின் கோரிக்கை நிராகரிக்கப்படமாட்டாது என்று கூறப்படுகிறது

இந்திய சர்க்காரின் நிதி இலாகா மந்திரி சபை இதுபற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறதாம்.

## நீதிபதியை 'பைத்தியம்' என்று வர்ணித்த மந்திரி!

### 2 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்

லாவோஸ்(நைஜீரியா), ஆக. 25—

நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில், நீதிபதி ஒருவரை, 'பைத்தியம்' என்று வர்ணித்த மந்திரி ஒருவருக்கு கடுமையான உடலுழைப்புடன் இரண்டு மாத சிறைத் தண்டனை தரப்பட்டிருக்கிறது.

நைஜீரியாவின் இயற்கை வள, சமூக சேவை இலாகா மந்திரியான அடியோக் அபிலாபு என்ற மந்திரி, அண்மையில் நடைபெற்ற தேர்தலை ஒட்டி, ஏதோ வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்திற்கு வர வேண்டுமென்று நீதிபதி 'சம்மன்' அனுப்பினுர்.

'தன்னை நீதிமன்றத்திற்கு அழைத்த முறை தவறு,' எனக் கருதிக்கொண்டு, மந்திரி, 100 'குண்டர்'களுடன் நீதிமன்றம் சென்று, நீதிபதியை வசைபாடியதுடன், 'நீதிபதி ஒரு பைத்தியக்காரன்' என்றும் வர்ணித்தாராம்.

மேலும், அவர் ஒரு பெடரல் மந்திரியானதால், அம்மாதிரி வசைபாடலாம் என்றும், தான் நீதிபதியின் எஜமானன் என்றும் கூறினுராம்!

'இவரது போக்கும், பேச்சும் நீதிமன்றத்தை அவமதிப்பதாகும்,' என்று கூறி, நீதிபதி, அவருக்கு சிறைத்தண்டனை விதித்திருக்கிருர்.

## 15,500 டாக்டர்கள் வேலைநிறுத்தம்

### சுகாதார இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை எதிர்த்து நடவடிக்கை

வியன்னு, ஆக. 25—

புதிய சுகாதார இன்ஷ்யூரன்ஸ் மசோதா ஒன்றை எதிர்த்து ஆஸ்டிரிய நாட்டில் உள்ள 2,500 பல் வைத்தியர்கள் உட்பட 15,500 டாக்டர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

'இந்தத் திட்டம்பற்றி தம்மைக் கலந்தாலோசிக்கவில்லை,' என்று, அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மிக அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டிய நோயாளிகள் தங்கள் வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, 3,000 டாக்டர்களை 'மருத்துவ கழகம்' சேர்த்து வேலை செய்ய வைத்திருக்கிறது என்றும் தெரிய வருகிறது.

## ஒரு ஏக்கரில் 10,792 தேங்காய்!

திரு - கொச்சி வட்டத்தைச் சேர்ந்த தேங்காய் உற்பத்தியாளர் ஒருவர், 1955-ம் ஆண்டு தேங்காய் உற்பத்திப் போட்டியில், ஒரே ஏக்கராவில் 10,792 தேங்காய்கள் உற்பத்தி செய்துள்ளாராம்.

## திண்டிவனத்தில் பயிற்சி நிலயமாம்!

### எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சிக்காகவாம்!

புதுடில்லி, ஆக. 26—

சென்னை மாநிலத்தில் திண்டிவனத்திலும், உத்திரப்பிரதேசம் கான்பூர் ஆகியவற்றிலும் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக தனித்தனியே ஒவ்வொரு நிலயம் அமைப்பதற்கான திட்டமொன்றுக்கு மத்திய ஆட்சியினர் அனுமதியளித்துள்ளதாகத் தெரிகிறது

## கோவாவில் பெரும் பொருளாதார நெருக்கடி

### நிர்வாகம் வீழ்ந்துபடும்: சலாசருக்கு எச்சரிக்கை

பம்பாய், ஆக. 26—

கோவாவில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு நிர்வாகம் வீழ்ந்துபடும் நிலை ஏற்பட்டிருப்பதாக கோவா கவர்னர்-ஜெனரல் போர்ச்சுகல் பிரதமர் டாக்டர் சலாசருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் என்று தெரிகிறது.

இந்தியா விதித்துள்ள பொருளாதாரக் கட்டுப்பாடுகள், கோவாவில் பெரும் நெருக்கடியை உண்டு பண்ணியிருப்பதாகக் கூறப்படுகிறது.

நீண்டதூர செய்தி, கப்பல், விமானப் போக்கு-வரத்து, மற்றும் பெரும் இராணுவம் இவற்றிற்காகும் அபரிமிதச் செலவுகள் எதிர்கொண்டேயிருப்பதால் நிர்வாகம் வீழ்ந்துபட வேண்டிவரும் என்றும் கூறப்படுகிறது.

## மான்சிங்கின் மகனும் வீழ்ந்தான்!

### கொள்ளைக் கூட்டத்தை ஒடுக்க ரூ.1 கோடி செலவிடப்பட்டதாம்!

### 150 கொலைகளையும், 1,000 கொள்ளைகளையும் மான்சிங் நடத்தியுள்ளானும்!

இந்தூர், ஆக. 26—

சுட்டுக் கொல்லப்பட்ட மத்திய பாரதத்தைச் சேர்ந்த பிரபல கொள்ளைக்காரனுன மான்சிங்கின் மூத்த மகனுன சுபேதார் சிங் என்பவனும், துப்பாக்கிச் சண்டையில் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

மான்சிங்கின் மற்றொரு மகனுன தசில்தார் சிங் என்பவன், சென்ற ஆண்டு, மத்திய பாரத் போலீசாரால் சுடப்பட்டு பலத்த காயங்களுடன் உத்திர பிரதேசத்தில் பிடிக்கப்பட்டிருக்கிருன்.

இந்தக் கொள்ளைக் கூட்டத்தில் இன்னும் அகப்படாதிருக்கிற ஒரே ஒரு பிரபலமான கொள்ளைக்காரன் ரூபா என்பவன் மட்டுமேதான்.

மான்சிங்கின் உடலை எடுத்துச் செல்ல முயன்றபோது ரூபா சுடப்பட்டதாகவும், ஆனல் தப்பித்துவிட்டதாகவும் போலீசார் தகவல் தெரிவித்திருக்கின்றனர்.

மான்சிங்கின் மூத்த சோதரரான நவாப் சிங் கொல்லப்பட்டார் என்பது குறித்து இன்னும் ஊர்ஜிதமான தகவல் இல்லை முன்னதாக, நவாப் சிங், கோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டதாக செய்தி வெளிவந்திருக்கிறது.

மான்சிங்கையும், அவனது கொள்ளைக் கூட்டத்தையும் ஒழிப்பதற்காக மத்திய பாரத், இராஜஸ்தான், உத்திரபிரதேசம்ஆகிய சர்க்கார்கள் இதுவரை ஒரு கோடி ரூபாய் வரை செலவிட்டிருக்கின்றனர் ஆனுலும் அவர்கள் வெற்றி பெ றவில்லை.

மான்சிங் கடந்த 1952-க்குப் பிறகு பல பொது நிகழ்ச்சிகள்,

(4-ம் பக்கம் பார்க்க.)

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 27—8—'55 சனி


வரலாற்றிலேயே இல்லாத பெருமை நமக்குக் கிடைத்திருக்கிறது; பெருமை மட்டுமா?—நாம் ஆள்கிறோம்—அவர்கள் ஆளப்படுகிறார்கள் என்ற இத்தாப்பு மட்டுமா? நமது இனத்தவரின் வாழ்வு மங்காமல் ஒளி வீசித்திகழ தென்னாட்டுச் செல்வங்களைச்

உழைப்பின விளைவுகளைக் கொள்ளையிடவுமான வாய்ப்பும் கிடைத்திருக்கிறது, நமக்கு!"

என்ற இறுமாப்பினால் அல்லாது—ஏகாதிபத்திய எண்ணத்தினால் அல்லாது, வேறெந்தக் காரணத்தினால் வட இந்திய ஏகாதிபத்திய வாதிகளுக்கு 'இந்தியாவில் தென்னாடு மிக முக்கியமான பகுதி'யாகத் தெரிவது?

ஏன், தென்னாடு 'உயிர் நாடி'?

## அரிசி விலை வீழ்ச்சியைத் தடுக்க ஏற்பாடு

### 'மலிவு ரக அரிசி'யை மாநில சர்க்காரே வாங்க முடிவு

மலிவுரக அரிசியின் விலை மணங்கு ஒன்றுக்கு ரூ. 11-க்கும் குறைவாக இறங்குமானால், நெல் விளையும் பிரதேசங்களையுடைய மாநில சர்க்கார்கள், அந்த ரக அரிசியை தாங்களே விலைக்கு வாங்கி, விலை வீழ்ச்சியைத் தடுக்குமாம்!

மத்திய ஆட்சியின் நிதி உதவியைக் கொண்டு, அவர்கள் சார்பில் அரிசியாகவோ அல்லது, நெல்லாகவோ அவற்றை வாங்குவது, மாநிலங்களின் விருப்பத்தைப் பொறுத்ததாம்!

நெல்லை அமைப்பதற்கு ஏற்படும் செலவைக் கவனித்து, நெல்லின் விலை நிர்ணயிக்கப்படும்.

மலிவு ரக அரிசியின் குறைந்த பட்ச விலையைக் கவனித்து நெல்லின் விலை நிர்ணயிக்கப்படும்

ஏஜெண்டுகள் மூலமாகவே மாநில சர்க்கார்கள் அரிசியை வாங்கும்.

அரிசியை சேமிப்பு செய்யும் செலவுகள், சிப்பந்திகள் சம்பளம், மற்றும் அவசியமான செலவுகள் ஆகியவற்றை மத்திய ஆட்சி ஏற்றுக்கொள்ளும்.

இந்தத் திட்டத்தை அமுல் நடத்த எவ்வளவு பணம் தேவைப்படும் என்பது பற்றியும், விலைக்கு வாங்க வேண்டிய நெல் ரகங்களைப் பற்றியும் விவரங்கள் தயாரிக்கப்படுமாம்.

## தூக்குத் தண்டனை ரத்து செய்யப்படும்?

### 'தக்க தருணம்' வரக்கூடும்

புதுடில்லி, ஆக. 25—

கசையடித் தண்டனையை நீக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட மசோதா, ராஜ்யங்கள் சபையில் நிறைவேறிவிட்டது.

மசோதா பற்றி நடந்த விவாதங்களுக்குப் பதிலளித்து பண்டித பந்த் பேசுகையில் சொன்னார்:—

"மனிதர்களை மிருகங்களாகவோ, சமூகத்தை காட்டுமிராண்டித்தனமுள்ளதாகவோ நாம் ஆக்கிவிடக் கூடாது; கசையடித் தண்டனையை அனுபவிப்பவர்கள் சீர்திருந்துவதில்லை; மாறாக, கெட்ட வழிகளையே பின்பற்றும் போக்குடையவர்களாக மாறிவிடுகின்றனர்; குற்றமிழைப்பவரை ஒரு குடிமகன் என்று கருதி, அவரைச் சீர்திருந்தச் செய்து, சமூகத்தில் அவருக்கும் ஒரு இடம் தருவதற்கான வழிகளை நாம் கையாளவேண்டும்;

"தூக்குத் தண்டனையை ஒழித்துவிடுவதற்கான யோசனையும் கூறப்பட்டுள்ளது; அவ்வாறு செய்யக் கூடிய தக்க தருணம் வரக் கூடும்; பிரிட்டனில் கூட, இதை ஒழிப்பது பற்றி பரிசீலனை செய்யப்பட்டது; ஆனால், தண்டனையை நீடிக்கவேண்டுமெனமுடிவு செய்யப்பட்டது."

## 'இஸ்லாத்துக்கே இழுக்கு ஏற்பட்டது'

### கராச்சி மகளிர் முறையீடு

பாக் முன்னாள் பிரதமர் முகமது அலி, அமெரிக்காவில் பாகிஸ்தான் தூதுவராக நியமிக்கப்பட்டதை ஒட்டி, கராச்சி மகளிர் தூதுக்குழு ஒன்று பாக். பிரதமர் சவுத்திரி முகமது அலியைச் சந்தித்து, அந்நியமனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

தன்னிடம் காரியதரிசியாகப் பணியாற்றிய மாதை 2-வது மனைவியாக்கிக் கொண்டதின் எதிரொலியே இதுவாகும்.

"முதல் மனைவியிருக்கையில், மீண்டும் மற்றொரு பெண்ணை மணந்துகொண்டதின் மூலம், அவர் 'இஸ்லாம் மத'த்துக்கே இழுக்கு தேடிவிட்டார்," என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

---

தாய்-சேய் நல விடுதிகளை ஏற்படுத்துவதற்கான மத்திய சர்க்காரின் திட்டத்தின் கீழ், பல்வேறு மாநில சர்க்கார்கள், பிற்பட்ட நிலையில் உள்ள பிரதேசங்களில் மொத்தம் 135 விடுதிகளைத் திறந்து வைத்திருக்கின்றனர்.

---

இந்தியப் போர்ப்படை வீரர்கள், வனமகோத்சவ இயக்கம் சம்பந்தமாக, நாடு முழுவதிலும் 1950-ம் ஆண்டு ஜூலை திங்களிலிருந்து இதுவரை மொத்தம் 8,20,868 மரக்கன்றுகளை நட்டிருக்கின்றனர்.

## ஒழிந்துவிடுமா?

ராஜ்கோட், ஆக. 24—

வரும் 'தீபாவளிப் பண்டிகை'யை, சௌராஷ்டிரா தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் 'சாதி இந்துக்களின்' இல்லங்களில் கொண்டாடுவார்களாம்!

ஏற்கனவே, பள்ளி 'மாணவர் விடுதி'களிலும், இதர இடங்களிலுமுள்ள சுமார் 250 தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு, தங்கள் இல்லத்தில் வந்து தீபாவளிப் பண்டிகை கொண்டாடுமாறு கோரி சாதி இந்துக்களினால் அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளனவாம்.

சௌராஷ்டிரத்திலுள்ள பின்தள்ளப்பட்ட வகுப்புகளுக்கான 'போர்டு', அந்த மாணவர்களின் போக்குவரத்துச் செலவுகளை ஏற்றுக் கொள்ளுமாம்!

## மொராக்கோ குழப்ப எதிரொலி

### இராணுவத் தலைவர், இராஜாங்கப் பிரதிநிதி இராஜினமா

மொராக்கோவிலுள்ள பயங்கரவாதிகளை ஒழிப்பதற்கு, தான் கோரிய அளவிற்குப் படைகளை அனுமதிக்க இராஜாங்கப் பிரதிநிதி கிராண்ட்வல் மறுத்துவிட்டதால், பிரெஞ்சு இராணுவக் காரியாலயத் தலைவர் ஜெனரல் லேபிளாங் இராஜினமாச் செய்துவிட்டாராம்!

அதே நேரத்தில், கிராண்ட்வலும் தனது பதவியை இராஜினமாச் செய்துவிட்டதாக செய்திகள் கூறுகின்றன!

### தொடர்ந்து தாக்குதல்: பரவலான நாசவேலை

அட்லாஸ் மலைப் பகுதி மக்கள் மீது தொடர்ந்தாற்போல் பிரெஞ்சு இராணுவம் தாக்குதல் நடத்துகிறதாம்; மொராக்கோவில் பல இடங்களில் டெலிபோன் கம்பிகள் துண்டிக்கப்பட்டனவாம்; தந்தி டெலிபோன் சீர்குலைக்கப்படுவதைக் கண்டு பிரெஞ்சு அதிகாரிகள் திணறுகின்றனராம்

### 'புரட்சி'க்கு நிதி உதவி

'சுதந்திரம் பெறுவதற்காக ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும்' மொராக்கோ அரபுகளுக்கு 25 இலட்சம் 'தினார்' நிதி உதவி அளிப்பதென ஈராக் சர்க்கார் தீர்மானித்துள்ளதாம்.

## சர்க்கார் ஊழியர்கள்

### 'சிரம தானம்' செய்ய அனுமதி

சென்னை, ஆக. 25—

'சிரம தான' இயக்கத்தில் சர்க்கார் ஊழியர்கள் பொது நலன் கருதி தாமாக முன்வந்து பங்கு பெறுவதற்கு சர்க்கார் அனுமதி வழங்கியிருக்கின்றனர்.

தங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் தங்கள் அலுவலக வேலைக்குக் குந்தகம் விளையாதவாறு சர்க்கார் ஊழியர்கள் அம்மாதிரி பணிபுரிவது ஆட்சேபனைக்குரியதல்ல என்பது மட்டுமின்றி, வரவேற்கத்தகுந்த ஒன்றுமாகும் என்று சர்க்கார் கருதுகின்றனராம்.

ஆனால், சர்க்கார் ஊழியர்கள், மாநில-மத்திய சர்க்கார்கள், அல்லது 'பாரத் சேவக் சமாஜ்' ஆகியவை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில்தான் 'சிரம தானம்' செய்யலாமேயன்றி, வேறு நிறுவனங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளக் கூடாது என்று தெளிவாகத் தெரிவித்திருக்கின்றனர்.

## புற்றுநோய்க்கு புதிய மருந்து

### அணு சக்தி கழிவுகள் மூலம் அரிய சாதனம்!

பிரிட்டனில் புற்றுநோய்க்கு அணுசக்தி சிகிச்சை முறை கையாளப்படுகிறது.

ரேடியம், எக்ஸ்ரே, அணுக் கதிரியக்கமுள்ள கோபால்டு முதலியவைகளைக் கொண்டு புற்றுநோய்க்கு சிகிச்சையளித்து வருகிறார்கள்.

சமீபத்தில், அணுசக்தி எரிபொருள் கழிவுகளிலிருந்து தயாரிக்கப்பட்ட 'சீசியம் உப்பு' ஒன்று, சிறந்த மருந்து என்று கண்டுபிடிக்கப்பட்டது; சீசியம் உப்பிலிருந்து வீசும் கதிர்கள் சக்தி வாய்ந்தவை; எரிபொருள் கழிவுகளிலிருந்து இந்த உப்பைப் பிரித்தெடுத்து, மருந்துப் பொருளாக உலோகக் குழாயில் அடைப்பது கடினமான வேலை.

அணுக் கதிர்கள் வெளியே வீசாமல் தடுக்க, கனமான ஈயத் தகடுகளும், காங்கிரீட் சுவர்களும் கட்டப்பட்டிருக்கிறது.

கம்பர்லாந்திலுள்ள அணு சக்தி நிலையம் ஒன்றுதான் இப்போது 'சீசியம் உப்பை'த் தயாரிக்கிறது.

அமெரிக்காவிலுள்ள பரீட்சார்த்த நிலையத்தைத் தவிர, வேறு எந்த நாடும் இந்தத் துறையில் ஈடுபடவில்லை.

## குந்தா மின்சாரத் திட்டம்

### குடியரசுத் தலைவர் ஆரம்பித்து வைப்பாராம்

சென்னை சர்க்காரின் குந்தா மின்சார உற்பத்தித் திட்ட வேலையை வரும் நவம்பரில், இந்திய குடியரசுத் தலைவர் இராசேந்திரர் ஆரம்பித்து வைப்பாராம்; திட்டத்திற்கு அடிப்படைக் கல்லையும் நாட்டுவாராம்.

---

'குடியரசுத் தலைவர் ஆண்டுதோறும் சில நாள் தென்னாட்டில் ஏன் தங்கவேண்டும்?' என்று கேட்டதற்கு, 'தென்னாடு இந்தியாவின் மிக முக்கியமான ஒரு பகுதி என்பதுதான் காரணம்,' என்று, இந்திய 'ராஜ்யங்கள் சபை'யில் பேரரசின் மந்திரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

அதாவது, இந்தியாவிற்கு 'உயிர் நாடி' தென்னாடு—என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'தென்னாடு ஏன் இந்தியாவின் மிக முக்கியமான பகுதி' என்று, எந்த உறுப்பினரும் கேட்டதாகவோ, அதற்கு மந்திரி பதில்தந்ததாகவோ செய்தி இல்லை.

அல்லது, யாரேனும், 'எப்படி ஏன் தென்னாடு முக்கியமானது?' என்று கேட்டு, மந்திரி பதிலிறுக்கவில்லையா—கேள்வியும் கேட்கப்பட்டு, மந்திரியும் பதில் தந்து, செய்தி திரட்டிய நிறுவனம் 'இது ஒன்றும் அவ்வளவு முக்கியமானதல்ல' என்று ஒதுக்கிவிட்டதா—அல்லது, செய்தி நிறுவனம் நடந்தது முழுவதையும் திரட்டித் தந்தும், செய்திகளை வெளியிட்ட தேசிய ஏடுகள் தங்களது 'நடைமுறை'ப் போக்கில், அந்தப் பின்பகுதியை இருட்டடிப்பு செய்துவிட்டனவா—என்பது, நமக்குத் தெரியாது.

'தென்னாடு எப்படி, ஏன் இந்தியாவில் முக்கியமான பகுதி?'—என்று, 'ராஜ்யங்கள் சபை'யில் எவர் கேட்டாலும் கேட்காவிட்டாலும் நாம் கேட்கவேண்டியிருக்கிறது.

உலகத்தின் உச்சி—ஏற்றம் மிகுந்த பனிப்பாறை இமயம் இருக்கிறது; அங்கு அதன் சாரலிலே இயற்கை அன்னை அள்ளித் தெளித்த அழகுக் கோலமாம் காஷ்மீர் உண்டு; தன்னிகரற்ற தலைநகர் டில்லி இருக்கிறது; கங்கையும் யமுனையும், சீலமும் ஜீனபும் பாய்க்தோடும் மண்டலம் உண்டு; எழிற்கோவிலாம் தாஜ்மகால் போன்ற மாளிகைகள் இருக்கின்றன—இன்னமும் மங்காமல்; தூங்காமல் வளரும் தொழில்வளம் மிகுந்த பம்பாய் உண்டு; வர்த்தகம் செழிக்கும் வங்கம் உண்டு; 'வளங்கொழிக்கும் வண்டல்மிகு நிலப்பரப்புகள் இருக்கின்றன.

வணிகக் கோமான்களும், வர்த்தகச் சீமான்களும் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் எழுப்பியுள்ள தொழில் கூடங்கள் ஆயிரமாயிரம் உண்டு; அத்தனைக்கும் மேலாக, இரண்டாயிரம் கோடிக்கும் அதிகமான ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள், அணைக்கட்டுகள், ஆராய்ச்சி நிலையங்கள், பயிற்சிக்கூடங்கள் அத்தனையும் வடநாட்டில் தான் இருக்கின்றன.

அந்த வடநாட்டில்தான், 'தேடாத செல்வமில்லை—நாடாத இன்பமில்லை' என்று கூறும் வாடாத வாழ்வு பெற்றுள்ள தங்களின் சுற்றமும்—

# கோவா படுகொலை: தமிழகமெங்கும் கண்டனம்

★

கோவாவில் அறப்போர் தொண்டர்கள் மீது போர்ச்சுகீசியர் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தைக் கண்டித்து தமிழகத்தில் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடைபெற்று, கண்டனத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; அவை இங்கு சுருக்கமாகத் தரப்படுகின்றன :—

## குளித்தலை

23—8—55 காலை 9 மணியளவில், தி மு. கழகம், திராவிடர் கழகம், காங்கிரஸ், கம்யூனிஸ்டு, மஜீத் - பாண்டியன் மன்றம், வர்த்தக குமாஸ்தா சங்கம், வியாபாரிகள் சங்கம், தையல் தொழிலாளர் சங்கம் ஆகிய சர்வ கட்சிகளும் அடங்கிய மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. மாலை 6 மணிக்கு மாரியம்மன் கோயிலில் திரு. கே. ஆர். வையாபுரி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர் தி. வீ. முத்துகிருஷ்ணன் (தி. மு. க.), தோழர் இராமதாஸ் பாரதி (காங்), தோழர் ஆர். கருப்பையா (கம்), தோழர் ஆர் கோவிந்தன் ஆகியோர் கோவா படுகொலை பற்றியும், போர்ச்சுகீசிய சர்க்காரின் அடக்குமுறையைக் கண்டித்தும் பேசினர். மேற்படி நிகழ்ச்சியில் தி. மு. கழகம் பெரும் பங்கு ஏற்று ஒத்துழைத்தது குறிப்பிடத் தக்கது.

ஃ ஃ ஃ

23-8-55 மாலை 6-30 மணிக்கு, தண்ணீர்ப் பள்ளி கலை வளர்ச்சி மன்றத்தில், தோழர் த. க. ரங்கன் தலைமையில் நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் கோவா வெறிச் செயலைக் கண்டித்தும், உயிர்நீத்த தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் வகையிலும் இரண்டு நிமிட நேரம் மௌனம் சாதிக்கப்பட்டது. கொலைபாதகச் செயலில் ஈடுபட்ட கோவா வெறியர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்க வழிவகை காண இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## நிலக்கோட்டை

19—8—55ல், நகர் முழுமையிலும் கடையடைப்பும், பொது வேலை நிறுத்தமும் நடைபெற்றது பள்ளிகள், தொழிலகங்கள், உணவு விடுதிகள், மற்றுமுள்ள எல்லாக் கடைகளும் மூடப்பட்டிருந்தன அன்று மாலை 4 மணிக்கு ஜவுளிக் கடை பஜாரிலிருந்து சகல கட்சிக் கொடிகளுடனும், கருப்புக் கொடிகளுடனும், கொடும்பாவி கட்டி இழுத்துக்கொண்டு ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாக வந்து மாலை 6 மணிக்கு பெருமாள் கோவில் முன்பாக, திரு. ஆர். பி. சுப்பையா தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்தில் உயிர் நீத்த வீரத்தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முறையில் எல்லோரும் எழுந்து நின்று 2 நிமிடம் மரியாதை செலுத்தினர். பின்னர், தோழர்கள் குழந்தைவேலு, எல். வி எஸ்.இராமாச்சாரி, எஸ் எம்.பி. தில்லை சிதம்பரம்,எஸ் வி.எம்.சோமசுந்தம், ஏ. சி மொட்டையாண்டி, என். இராமமூர்த்தி, எல். எம். வீராச்சாமி, பெத்தனன், ராஜகோபால், ஈ. காத்தான், சையது இப்ருஹிம், டி. எம் வீராச்சாமி, டி. மாரியப்பா ஆகியோர் பேசினர். கண்டன அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## வாணியம்பாடி

23—8—55ல், நகர் முழுவதிலும், பூரண கடைஅடைப்பு செய்யப்பட்டது. திரைப்படக் கொட்டகைகள், பள்ளிகள் ஆகியவை யாவும் மூடப்பட்டு, சர்வகட்சியினரும் அடங்கிய மாபெரும் ஊர்வலம், திரு. கே முருகேசன் தலைமையில் நடைபெற்றது. பின்னர், திரு. வி. எஸ். விஸ்வநாதம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் வி. என். தத்தப்பன், குரவேல், கிருஷ்ணன், உம்மர், கிருஷ்ணன் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர்.

## மதுரை தி. மா. மு. கழகம்

21—8—55 காலை 10 மணிக்கு, தோழர் சுப்பையா தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர் மா. பாண்டியனைச் செயலாளராகக் கொண்ட புத்தாண்டுச் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர் சென்ற ஆண்டு வரவு—செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டதும், கோவா அடக்குமுறையைக் கண்டித்தும், உயிர் துறந்த வீரர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## குஜிலியாம்பாறை

18—8—55 காலை 10 மணிக்கு சாந்தி மைதானத்திலிருந்து தோழர் ஏ. இராசகோபால் (தி. மு. க.) தலைமையில் கண்டன ஊர்வலம் நடைபெற்றது. தோழர் வி. வெங்கிடுசாமி (காங்), கே. மாறன் (தி. க.) மற்றும் பள்ளி மாணவ-மாணவிகளும், ஆசிரிய-ஆசிரியைகளும் கலந்துகொண்டனர். நகரிலுள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. அன்று மாலை 6-30 மணிக்கு, மங்கம்மாள் சத்திரத்தின்முன் திரு வி. குருசாமி (காங்) தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் வி. கார்மேகம், கே. மாரன், மு ராசன், பி செல்லமுத்து மற்றும் பல தோழர்களும் பேசினர்.

## வெண்ணந்தூர் :

22—8—55 காலை 9 மணிக்கு சர்வகட்சித் தோழர்கள் அடங்கிய நீண்ட ஊர்வலமும், அன்று மாலை 7 மணிக்கு திரு. கே இராமலிங்கம் தலைமையில் கண்டனப் பொதுக் கூட்டமும் நடைபெற்றது எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்த தோழர்கள் ஆர். வி. தங்கராஜு, எம். பி. சுப்பிரமணியம், எஸ் எம். பெரியண்ணன், எஸ். ஆர். வெங்கடாசலம், எஸ் ஏ. செங்கோடன், பி. வி. கந்தசாமி, என். ஏ. சுப்பராயன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கூட்ட இறுதியில் துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்தும், உயிரிழந்த வீரர்களுக்கும் படுகாயமுற்றோருக்கும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொண்டும், கோவா விடுதலையில் இந்திய சர்க்கார் தீவிர நடவடிக்கைஎடுத்துக்கொள்ளமுன் வரும்படி கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பள்ளிகொண்டா

23—8—55-ல், நகரிலுள்ள சர்வகட்சித் தோழர்களடங்கிய மாபெரும் ஊர்வலம் நடைபெற்ற பின், திரைப்படக் கொட்டகையில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தி. மு. கழகச் சார்பில் தோழர் அ. ரங்கசாமி சொற்பொழிவாற்றினர். நகரிலுள்ள கடைகள், பள்ளிகள், பாங்குகள் மற்றும் தல நிர்வாகக் காரியாலயமும் ஆக யாவும் அடைக்கப்பட்டு பூரண அர்த்தால் மேற்கொள்ளப்பட்டது.

## முத்துப்பேட்டை

23—8—55ல்,முத்துப்பேட்டை நகர் முழுமையிலும் கடைகள் அடைக்கப்பட்டு, வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. ஏ. எஸ் என். திடலில் திரு. சாமிதுரை (காங்) தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் த. சிதம்பரம் (பி. சோ.), இ கே முகம்மது இஸ்மாயில் (காங்), பழனிவேல் (கம்), ந. தருமலிங்கம் (தி. மு. க.) மற்றும் சில தோழர்களும் பேசினர். முத்துப்பேட்டையிலிருந்து தோழர் நாதமணி தலைமையில் ஏழு பேர் கொண்ட சத்தியாக்கிரகக் குழு ஒன்றை கோவாவிற்கு அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது. கூட்டத் துவக்கத்திற்கு முன்னர் ஒரு மாபெரும் ஊர்வலமும் நடைபெற்றது.

## நெல்லிக்குப்பம்

23—8—55 காலை 7 மணிக்கு, இந்நகர் 'பாரி அன் கோ' தொழிலாளர்கள் உட்பட சமார் 5,000 பேரடங்கிய சர்வகட்சி ஊர்வலம் நடைபெற்றது. மாலை 6 மணியளவில் தோழர் பி. தனகோடி தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் ச. இராசகோபாலன், கோவிந்தராசன், சிவசங்கரன், ஷெரீப், மயிலாசம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## வேலூர் (சேலம்)

23—8—55ல், இங்குள்ள துவக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, சினிமா தியேட்டர்கள், பாங்குகள், மற்றும் கடைகள் அனைத்தும் மூடப்பட்டன; அன்று மாலை 4 மணிக்கு, சர்வகட்சியின் சார்பில் தோழர் பி. கருப்பண்ணன் தலைமையில் நடைபெற்ற ஊர்வலத்தில் தி. மு. க., காங்கிரஸ், கம்யூனிஸ்டு, வ. உ. சி. வாசகசாலை ஆகியவைகள் கலந்துகொண்டன மாலை $5\frac{1}{2}$ மணிக்கு, வ. உ. சி. திடலில், திரு ஜி. ராமையா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வி. எஸ். சதாசிவம், வி. ஏ. இலக்குமணன், வி. ஏ. இராமநாதன், பி. கருப்பண்ணன், பி. சின்னுசாமி, கே. ஆர். நடராசன், வாசுதேவன், வி. டி. வெங்கடாசலம், வி. எஸ். காச்சிமுத்து, எஸ் நாராயணசாமி ஆகிய பல கட்சி தோழர்களும் சொற்பொழிவாற்றினர். பின்னர், கோவா கண்டன, அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், கோவாப் பிரச்சினையில் இந்திய சர்க்கார் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

# மதுரை மாவட்டத்தில் அண்ணதுரை

## சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் விவரம்

நெல்லை மாவட்டச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு, அடுத்து, அண்ணா அவர்களும், அவர்தம் குழுவினரும் மதுரை மாவட்டச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளனர்; மதுரை மாவட்ட சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் அனைத்தும் இங்கு தரப்படுகின்றன :—

## மதுரை அமெரிக்கன் கல்லூரி

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் திருவள்ளுவர் கழகச் சார்பில் கழகத் தலைவர் தலைமையில் 22—8—55 மாலை 5 மணிக்குக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின்னர், அண்ணா அவர்கள் 'நேற்று, இன்று, நாளை' என்ற தலைப்பில் ஒரு மணிநேரம் விரிவுரையாற்றினர்.

மாணவர்கள் அண்ணாவுக்கு மலர் மாலை சூட்டி வரவேற்று நன்றி கூறினர்.

கல்லூரிப் பேராசிரியர்களும், மாணவர்களும் பெருந்திரளாகக் கூடி அண்ணா அவர்களின் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தனர்.

## 'மணிமகுடம்'—நாடகம்

மதுரை பி. சி. எம். தியேட்டரில் 21—8—55 இரவு $10\frac{1}{2}$ மணியளவில் அண்ணா அவர்கள் தலைமையில், தோழர் எஸ். எஸ் இராசேந்திரன் நாடக மன்றத்தாரின் 'மணிமகுடம்' நாடகம் நடைபெற்றது. அண்ணா அவர்கள் நாடகத்துறை மூலம் புதிய கருத்துக்களையும், பகுத்தறிவுக் கருத்துக்களையும் மக்கள் உணரும்படி—தெளிவு பெறும்படி நடித்துக்காட்டும் நாடக மன்றத்தார் நற்பணியைப்பாராட்டினார். தோழர் எஸ். எஸ் இராசேந்திரன் அண்ணா அவர்களை வரவேற்று மலர் மாலை சூட்டினார். தோழர் எஸ். முத்து நன்றி கூறினார். பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர்.

## தேவதானப்பட்டி :

23—8—55 மாலை 4 மணிக்கு, மதுரை மாவட்டம் தேவதானப்பட்டியில் அண்ணா அவர்களையும், மற்றும் தோழர்கள் எஸ் முத்து, அ. பொன்னம்பலனார், பி. பிட்டு, சேது ஆகியவர்களையும் வரவேற்று இலட்சிய ஒலி முழக்கங்களுடன் ஊர்வலமாகப் பொதுக் கூட்ட மேடைக்கு அழைத்துச் சென்றார்கள்.

தோழர் எஸ் முத்து தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் அ. பொன்னம்பலனார், அண்ணா ஆகியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை விளக்கியும், திருச்சி மாநில மாநாட்டுக்கு யாவரும் வரும்படி கேட்டுக்கொண்டும் சொற்பொழிவாற்றினர். அண்ணா அவர்களுக்கு, மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் வழங்கப்பட்டன.

## பெரியகுளம் :

28-8-55 மாலை 5-30 மணிக்கு, பெரியகுளம், தி. மு. கழகத் தோழர்கள், ஆர்வத்துடன் அண்ணா அவர்களையும், மற்றும் தோழர்களையும் வரவேற்றார்கள். ஆற்றின் நடுவே அமைக்கப்பட்டிருந்த மேடையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் வி. வி. குருசாமி, கூட்டத்திற்குத் தலைமை வகித்து முன்னுரை கூறிய பின், தோழர்கள் எஸ். முத்து, அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசியதும், அண்ணா அவர்கள், கழக இலட்சியங்களை விளக்கியும், மாநில மாநாட்டுக்கு ஆதரவு தந்து, மாநாட்டுக்கு வந்து சிறப்பிக்கும்படியும் கேட்டுக்கொண்டு சொற்பொழிவாற்றினர். அண்ணா அவர்கட்கும், குழுவினருக்கும் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் வழங்கப்பட்டது.

## ஆண்டிப்பட்டி :

23—8—55 இரவு 9 மணிக்கு தோழர் எஸ் முத்து தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தலைவர் முன்னுரை கூறிய பிறகு தோழர்கள் அ. பொன்னம்பலனார், அண்ணா ஆகியோர் சாதி—மத—சமய—பூசல்கள் ஒழிந்து மக்கள் இன எழுச்சியும், தன்மானமும், அறிவுணர்ச்சியும் பெற்று, சமூக-அரசியல்-பொருளாதார விடுதலைக்குப் பணியாற்றும் தி. மு. கழகத்தை ஆதரிக்க வேண்டுமென்றும், திருச்சி மாநில மாநாட்டுக்கு யாவரும் ஒத்துழைப்பு தரும்படி கேட்டுக்கொண்டும், மதம்-கடவுள்-புராணம் ஆகியவைகளின் பெயரால் பொருளும், நேரமும், அறிவும் பாழாக்கப்படுவதையும் எடுத்துக்கூறி, வறுமை-வாட்டம்-பட்டினி-பசி-வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றைப் போக்க காங்கிரஸ் ஆட்சியாளர் திட்டம் தீட்டாமல், வடவரை வளமாக்கி—தென்னாட்டை—திராவிடத்தை தேயவைக்கும் வகையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் தயாரிப்பதையும் விளக்கிப் பேசினார்கள்.

அண்ணா அவர்களுக்கும், மற்றும் தோழர்களுக்கும் பல இனங்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் சூட்டப்பட்டன.

## 'மணி மகுடம்'—நாடகம்

23—8—55 இரவு 11 மணிக்கு, ஆண்டிப்பட்டியில் தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் நாடக மன்றத்தாரின் 'மணிமகுடம்' நாடகம் அண்ணா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் அண்ணா அவர்கட்கு மலர் மாலை சூட்டினார். (ச. தி.)

## கம்பம் :

24—8—55 மாலை $4\frac{1}{2}$ மணிக்கு, கம்பம் தி. மு. கழகத் தோழர்கள், அண்ணா அவர்களையும், குழுவினரையும், கழகக் கொடிகளுடன் நகர எல்லையில் வரவேற்று, பல்லாயிரக்கணக்கானமக்கள் திரண்டுவர, ஊர்வலமாக, இலட்சிய ஒலி முழக்கம் செய்துகொண்டு பொதுக் கூட்ட மேடைக்கு அழைத்துச் சென்றார்கள். தோழர் பி. பிச்சையா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் எஸ். முத்து, அ பொன்னம்பலனார் ஆகியோர் பேசிய பின், அண்ணா அவர்கள், தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், சமுதாயப் பூசல்கள் ஒழிந்து, 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற உயர்ந்த நெறி பரவ, மக்கள்,அன்பு—அறிவு—நெறிவழி வாழ்க்கை நடத்தி முன்னேற்றமடைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அண்ணா அவர்கட்கு பல இனங்கள் சார்பில் வரவேற்பு மடல்களும், கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் சூட்டப்பட்டன.

* * *

அண்ணா அவர்கள் வரும் வழியில், நிலக்கோட்டை, புதுப்பட்டி தோழர்கள், கழகக் கொடிகள் தாங்கி நின்று, வரவேற்று, கைத்தறித் துண்டுகள் வழங்கினர்.

## போடி :

24-8-55 இரவு $7\frac{1}{2}$ மணிக்கு, போடி நகர தி. மு. கழகச் சார்பில் தோழர் எம். கே. சிவலிங்கம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர்கள் ஜி. செஞ்சேரலாதன்,அ. பொன்னம்பலனார், எஸ். முத்து ஆகியோர் பேசியதும் அண்ணா அவர்கள் திராவிட நாட்டு மக்கள் இன எழுச்சியோடு ஒன்றுபட்டு, மூவேந்தர் ஆண்ட நம் வளமார் திராவிடத்தை - வட்வர்

(4-ம் பக்கம் பார்க்க)

# 'பின் தள்ளப்பட்ட வகுப்பினருக்கு நீதி வேண்டும்!'

## 'இல்லையேல் பட்டினிப் போர் தொடுப்பேன்'

### சென்னை மேல் சபையில் தோழர் சுப்பிரமணியம்

★

சென்னை, ஆக. 25—"பின்தள்ளப்பட்ட வகுப்பினருக்கு சர்க்கார் உத்தியோகங்களில் நீதி வழங்கப்படவில்லை," என்று, சென்னை மேல் சபையில் ஏ. சுப்பிரமணியம் புகார் செய்திருக்கிறார்.

பணித்தேர்வுக் குழுவில் (சர்வீஸ் கமிஷன்), மூன்று உறுப்பினர்கள் பின்தள்ளப்பட்ட வகுப்பிலிருந்தும், ஒருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்தும், மற்றொருவர் உயர் வகுப்பிலிருந்தும் நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர் யோசனை தெரிவித்திருக்கிறார்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்ட அவர், சட்ட சபையின் அடுத்த வரவு-செலவுக் கூட்டத்திற்குள், பின் தள்ளப்பட்ட வகுப்பினருக்குக் கிடைக்க வேண்டிய நீதி கிடைக்காவிட்டால் தாம், பட்டினிப் போர் துவங்கப்போவதாக அறிவித்திருக்கிறார்.

# பெங்களூர் கழகத் தோழர் பிரான்சிஸ்

## இரண்டு நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்

சிறைவாயிலில் ஆயிரக்கணக்கான தோழர்கள் வரவேற்பு

பெங்களூர், ஆக. 26—
சென்ற ஜூலை மாதம் 17-ந் தேதியன்று பெங்களூர் சிக்கலால் பாக்கில், தி. மு. கழகச் சார்பில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களது பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அக்கூட்டத்திற்கு, அனுமதி இல்லாமலேயே ஒலி பெருக்கி உபயோகித்ததற்காக பெங்களூர் தி.மு. கழகத் தோழர் ஏ. டி. பிரான்சிஸ் அவர்கள் மீது போலீசார் வழக்குத் தொடுத்திருந்தனர்.

விசாரணையின்போது, தோழர் பிரான்சிஸ் அவர்களை போலீஸ் அதிகாரி, அனுமதியில்லாமலேயே ஒலிபெருக்கி உபயோகித்தாரா இல்லையா என்று கேட்டதும், தோழர் பிரான்சிஸ் அவர்கள் ஒலிபெருக்கி உபயோகித்ததாகக் கூறின உடனேயே நீதிபதி அவருக்கு ரூ. 5 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினர்.

ஆனால் அபராதம் கட்டமறுத்த தோழர் பிரான்சிஸ் அவர்கள், "என் சொந்த விஷயமாக இருந்தால் நான் 5 ரூபாய் அபராதம் கட்டுவது பெரிய காரியம் ஒன்றுமல்ல. ஆனால், இது தி. மு. கழகத்தைப் பொறுத்த விஷயம் எனவே அபராதம் கட்டமுடியாது" என்று பதிலிறுத்தார்.

உடனே நீதிபதி தோழர் பிரான்சிசை ஒருமுறை பார்த்துவிட்டு, அபராதம் கட்டமறுத்தமைக்காக இரண்டு நாள் சிறைத் தண்டனை விதிப்பதாகக் கூறினார்.

தோழர் ஏ. டி. பிரான்சிஸ் அவர்கள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகையில் தோழர் ஈ. வெ கி சம்பத் அவர்களும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தோழர் பிரான்சிஸ் அவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட செய்தி நகர மக்களிடையே பெரும் பரபரப்பை உண்டு பண்ணிவிட்டது.

சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அவர், ஒரு அரசியல் கைதியாக இருந்தபோதிலும்கூட, மற்ற சில்லரைக் கைதிகளுடனேயே சேர்த்து அழைத்துச் செல்லப்பட்டாராம்.

இரண்டு நாள் தண்டனை முடிந்து, தோழர் ஏ. டி. பிரான்சிஸ் இன்று விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

அவர் சிறைவைக்கப்பட்டிருந்த மத்திய சிறையின்வாயிலில் ஆயிரக்கணக்கான தோழர்கள் மிகுந்த ஆர்வமுடன் வரவேற்று மலர்மாலைகள் சூட்டி, அடக்குமுறை ஒழிப்பு மொழிகளை முழக்கிக்கொண்டு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

ஊர்வலம் பெங்களூர் பிளாக் பள்ளி தி. மு. கழகக் கிளையை வந்தடைந்ததும், தி. மு. கழகத்தைப் பற்றிய மைசூர் சர்க்காரின் கருத்து என்ன என்பதை விளக்கி தோழர்கள் எஸ். ஜே. உசேன், வி. செல்வராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## புதுவை சட்டசபை

எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு!

புதுவை, ஆக. 26—
தனிப்பட்டவர்களிடமிருந்து, சர்க்கார், பொதுநலன் கருதி சொத்துக்கள் வாங்கும்போது, அவற்றின் விலை நிர்ணயத்திற்கான ஜூரிகள் நியமிப்பதில், தோற்றுப்போன காங்கிரஸ்காரர்களுக்கு இடம் தருவதை எதிர்த்து, புதுவை சட்டசபையில் எதிர்க் கட்சியினர் வெளியேறியிருக்கின்றனர்.

'ஜூரிகள்' எல்லாக் கட்சியிலிருந்தும் நியமிக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் கோரியிருக்கின்றனர்.

என்றாலும், சபை, தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது; பின்னர், சபையின் நடவடிக்கைகளில் எதிர்க்கட்சியினர் கலந்துகொண்டிருக்கின்றனர்.

## தோட்டாக்களை தாங்கி நின்ற வீராங்கனை!

தங்கப் பதக்கம் பெற்றார்

வெங்கூர்லா, ஆக 25—
கோவா விடுதலைப் போராட்டத்தில், போர்ச்சுகீசியப் போலீசாரின் தோட்டாக்களைத் தீரமுடன் தாங்கி நின்ற தோழியர் சுபத்திராவுக்கு, நகரசபைத் தலைவர் ஒரு தங்கப் பதக்கத்தைப் பரிசளித்தார்.

மருத்துவ மனையில் அவர் அனுமதிக்கப்பட்ட பின், அவரது உயிரைக் காப்பாற்ற 5 பேர் 'இரத்தத் தானம்' செய்தனராம்!

## 'சீக்கிரமே சுதந்திரம்!'

மொராக்கோவிற்குக் கிடைக்கும்?

பிரெஞ்சுப் பிரதமர் எட்கார் பாவ்ரே, மொராக்கோ தேசியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தையில், 'சீக்கிரமே' மொராக்கோவிற்கு சுயாட்சி வழங்குவதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

மொராக்கோ தேசியவாதிகளிடையேயும், பிரான்சிடையேயும் நம்பிக்கை பெற்றுள்ள 50 வயதான அகமது மார்கேஷ், மொராக்கோவின் முதல் பிரதமராகலாம் என்று கூறப்படுகிறது

இப்போது சுல்தானாயிருக்கும் முகம்மது பென்அராபா பதவியிலிருந்து நீக்கப்படுவார் என்றும் அவருக்குப் பிறகு, ஒரு சட்டபூர்வமான மன்னரோ, அல்லது நாடு கடத்தப்பட்டுள்ள சுல்தானோ வரும்வரை சிம்மாதனத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு 'கவுன்சிலோ' நியமிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

## மான்சிங் மகனும்......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமண விழாக்கள் இங்கெல்லாம் தோன்றியிருக்கிறானும்; என்றாலும் அவனைப் போலீசாரால் பிடிக்க முடியவில்லையாம்.

கௌரவமான பணக்காரக் குடும்பமொன்றில்பிறந்த மான்சிங். 20 ஆண்டுகளுக்கு முன், தான் தொடர்பு வைத்துக்கொண்டிருந்த பார்ப்பனக் குடும்பம் ஒன்றுடன் சச்சரவு ஏற்பட்டதினால், அந்தக் குடும்பத்தில் இருவரைக் கொன்றுவிட்டானும்; போலீசாரின் கண்களிலிருந்து தப்புவதற்குக் கொள்ளைக்காரனாக மாறியிருக்கிறான்; பின்னர், அந்தக் குடும்பத்தில் எஞ்சியிருந்த ஒருவனையும் இரண்டு ஆண்டுகளுக்கு முன் கொன்று பழி தீர்த்துக்கொண்டானும்!

இந்தியாவின் 'ராபின் ஹூட்' என்று மான்சிங் அழைக்கப்படுவதுண்டு.

65 வயதான மான்சிங் சுமார் 150 கொலைகளையும், சுமார் 1,000 கொள்ளைகளையும் புரிந்தவனும்.

கடந்த 20 ஆண்டுகளாக, காடுகளிலேயே மிக கஷ்டத்துடன் மான்சிங் வாழ்ந்திருக்கிறான்.

இவனது கொள்ளைக் கூட்டத்தினால், மத்திய பாரத், இராஜஸ்தான், விந்திய பிரதேசம், உத்திரப் பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்கள், கதிகலங்கி நின்றிருந்தன.

மான்சிங்கைப் பிடித்துத் தருவோருக்கு—அவன் தலையைக் கொண்டுவருவோருக்கு ரூ. 15,000 பரிசு தருவதாக, சர்க்கார் அறிவித்திருந்தனர்.

தி. மு. க. பொதுச்செயலாளர்
## இரா. நெடுஞ்செழியன்

புதுக்கோட்டை வருகை

28—8—55 காலை 7-30 மணிக்கு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, புதுக்கோட்டை புகைவண்டி நிலையத்தில் வரவேற்பும், மாலை 3 மணிக்கு, (டவுன் ஹால்)நகரமன்றத்தில் நகரசபை வரவேற்பும் நடைபெறும். மாலை 4-15 மணிக்கு, அரசினர் கல்லூரியில் 'தமிழ்ப் பேரவை' சொற்பொழிவும், மாலை 5-30 மணிக்கு, அரசினர் கல்லூரி விளையாட்டு மைதானத்திலிருந்து ஊர்வலமும், மாலை 6 மணிக்கு திலகர் திடலில் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

* * *

## அம்மாசத்திரம் வருகை

30—8—55 செவ்வாய் மாலை, அம்மாசத்திரம் கடை வீதியில், தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் கே. ஆர். இராமசாமி ஆகியோர் பேசுவர்.

## பொதுச்செயலாளர்

புதுக்கோட்டை நகரசபை வரவேற்பு

25—8—55-ல் நடைபெற்ற புதுக்கோட்டை நகரசபையின் அவசரக் கூட்டத்தின் போது, 28—8 55 அன்று புதுக்கோட்டைக்கு வருகை தருகிற தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு, நகர சபையின் சார்பில், அன்று மாலை 3 மணிக்கு நகர மண்டபத்தில் வரவேற்புத் தருவதென தீர்மானிக்கப்பட்டது. (ந-நி.)

## சிதம்பர வட்ட தி. மு. கழக (கிளை) தோழர்கட்கு

"30-8-55 மாலை 4 மணிக்கு, சிதம்பரம், விளங்கிஅம்மன் கோவில் தெரு, 'தம்பி' அலுவலகத்தில், வட்டக் குழுக் கூட்டம், அண்ணா அவர்கள் முன்னிலையில் நடைபெறும். மாநில மாநாட்டு நிதி பங்குத் தொகை ரூ. 12-ம் உடன் கொண்டுவரவும். அன்று காலை 11 மணிக்கு வட்ட தி. மு. கழகத்தை அண்ணா அவர்கள் திறந்துவைப்பார்," என்று, சிதம்பரம் வட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் பொன் சொக்கலிங்கம் அறிவிக்கிறார்.

### குடந்தை தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

28—8—55 காலை 10 மணிக்கு, தோழர் கே. கே. நீலமேகம் இல்லத்தில், செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, பல விஷயங்கள் குறித்து ஆராயப்படும்.

### திருவள்ளுவர் முத்தமிழ்கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

30—8—55 மாலை 5 மணிக்கு சென்னை-பெத்துநாயக்கன் பேட்டை, அம்மன் கோவில் தெரு தர்கா பவுண்டரி எதிரிலுள்ள திடலில், மேற்படி கழக ஆண்டு விழாவும், தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கு வரவேற்பும், தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், சி. பி. சிற்றரசு ஆகியோர் பேசுவர்.

# மக்கள் சபைத் தலைவரை அவமதித்ததாக உறுப்பினருக்கு தண்டனை

## ஒரு வாரத்திற்கு நடவடிக்கைகளில் பங்கு பெற முடியாது

புதுடில்லி, ஆக. 26—
மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினரான எச். வி. காமத் என்பவரை, 'சபையின் நடவடிக்கைகளில் ஒரு வாரம் கலந்துகொள்ளக்கூடாது' என்று, மக்கள் சபைத் துணைத் தலைவர் எம். அனந்தசயனம் அய்யங்கார் உத்தரவிட்டிருக்கிறார்.

சபைக்கும், சபைத் தலைவருக்கும் எதிராக 'கௌரவக் குறைவான வாசகங்'களை உபயோகித்ததாக அவர் மீது சபைத் தலைவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

நடைபெற்ற சம்பவங்களுக்காக தோழர் காமத் வருத்தந்தெரிவித்தால், முடிவை மாற்றுவது பற்றி யோசிப்பதாக தலைவர் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், தோழர் காமத், 'உங்களுக்கு ஆண்டவனின் ஆசிகள் எப்போதும் கிடைப்பதாக!' என்று கூறிவிட்டு, சபையைவிட்டு வெளியேறியிருக்கிறார்.

முன்னால் முடிவடைந்துவிட்ட விஷயம் பற்றி தோழர் காமத், மறுநாள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பியதாகத் தெரிகிறது. இதனை அனுமதிக்க தலைவர் மறுத்திருக்கிறார். மீண்டும் மீண்டும் தோழர் காமத், தான் பேசவேண்டுமென வற்புறுத்தியிருக்கிறார்.

இப்போது தலைவரும், காங்கிரஸ் உறுப்பினர்களும், 'தோழர் காமத் உட்கார்ந்துவிட வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டனர்.

அப்போதும், தான் வாதிட விரும்புவதாக தோழர் காமத் கூறவே, சபைத் தலைவர், 'தோழர் காமத் அன்றைய தினம் சபைக்கு வரக்கூடாது,' என்று உத்தரவிட்டார்.

உடனே காமத், தனது சாமான்களை எடுத்துக்கொண்டு புறப்படும்போது, 'முன்னாளைய தலைவரின் முடிவு, விபரீதமானது; முட்டாள்தனமானது' என்று வர்ணித்தாராம்.

இதைக்கேட்ட தலைவர் 'தோழர் காமத், சபையையும் தலைவரையும் அவமதிக்கிறவகையில் பேசுவ'தாகக் கூறி, 'ஒரு வாரத்திற்கு சபைக்கு வரக்கூடாது' என்று உத்திரவிட்டிருக்கிறார்.

இதர எதிர்க் கட்சியினர், தோழர் காமத் குறிப்பிட்டது தலைவரை அல்லவென்றும், காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரைத்தான் அப்படிக் குறிப்பிட்டதாயும் தலைவருக்கு எடுத்துரைத்தனர்.

பிரதமர் பண்டித நேரு, 'சபைத் தலைவரின் முடிவு நியாயமானது; சபையின் கௌரவம் காப்பாற்றப்பட வேண்டியது மிக அவசியமானதாகும்; தோழர் காமத் தமது செயலுக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டால உத்தரவை மாற்றுவது பற்றி யோசிப்பதாக தலைவர் கூறியிருப்பது வரவேற்கத்தகுந்தது; உறுப்பினர் வருத்தம் தெரிவித்து, சபையின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தென்னாற்காடு மாவட்டத்தில்

## அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

28-8-55 காலை 9: கடலூர் நியூ சினிமாவில் சிறப்புக் கூட்டம்;
பகல் 12: புகழேந்தி இல்லத்தில் விருந்து;
பகல் 2: மாவட்டக் குழுக் கூட்டம்;
மாலை 3: நெல்லிக்குப்பம் ஊராட்சி மன்ற வரவேற்பு;
மாலை 6: பொதுக் கூட்டம்.

29-8-55 காலை 10: உளுந்தூர்பேட்டை தோழர் சண்முகத்தின் செல்விக்கு பெயர் சூட்டு விழா;
மாலை 4: தியாகதுருவம் பொதுக்கூட்டம்;
இரவு 7: விழுப்புரம் பொதுக்கூட்டம்.

30-8-55 மாலை 6: சிதம்பரம் பொதுக்கூட்டம்;
இரவு 10: 'பரப்பிரம்மம்' நாடகத் தலைமை.

31-8-55 மாலை 6: திட்டக்குடி பொதுக்கூட்டம்.

## மாநில மாநாட்டு நிதியளிப்பு விழா

சிதம்பரம்

டவுன் ஹால் மைதானத்தில் 30—8—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: பொன். சொக்கலிங்கம்

பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
தில்லை-வில்லாளன்
இரா. சாம்பசிவம்
இரெத்தின. பாலகுருசாமி

### சென்னை 25-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

29—8—55 காலை 8 மணிக்கு. சென்னை-புரசை, எண் 18, பெருமான் நாய்க்கன் தெருவிலுள்ள தோழர் துரைராசன் இல்லத்தில், சென்னை 25-வது வட்ட தி. மு கழக செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

### சென்னை 6-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

30—8—55 மாலை 6 மணிக்கு சென்னை 6-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் கழக இல்லத்தில் நடைபெறும்.

## மதுரை மாவட்டத்தில்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஆதிக்கத்திலிருக்கும் திராவிடத்தை மீட்க, திராவிட சமதர்மக் குடியரசு அமைக்கப் பணியாற்ற யாவரும் ஒன்றுபட வேண்டுமென்றும், சாதி, மதப் பூசல்கள் விட்டொழித்து, மனிதாபிமானம், மக்கள் முன்னேற்றம் ஆகியவை கருதி உழைக்கும் தி. மு. கழகத்திற்கு மக்கள் ஆதரவு தந்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் சொற்பொழிவாற்றினர்.

மேலும் அண்ணா பேசுகையில், "மதம், கடவுள் ஒழிப்புப் பிரச்சாரங்களை நாங்கள் செய்யவில்லை; 'ஒன்றே குலம் - ஒருவனே தேவன்' என்ற உயர்ந்த நெறியைத்தான் நாங்கள் பரப்பி வருகிறோம்; எங்கள் கருத்துக்களை 'மத நிந்தனை; நாத்திகம்'—என்று கூறி பொது மக்களை மிரட்டுவதால் தேர்தல்களில் காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற—சட்டசபையில் அமைச்சர் பதவி பெற முடியுமே தவிர, மக்களின் வாழ்க்கை நிலை உயர முன்னேற்றம் காண முடியாது," என்றும் கூறினார்.

அண்ணா அவர்களுக்குப் பல கிளைக் கழகங்கள் சார்பில் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டு, கைத்தறித் துண்டுகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.